**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**

**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை**

**CC.No.66/2025**

**CNR.NO. TNVL – 24 – 001644 – 2025**

அரசுக்காக காவல் ஆய்வாளர் மூலமாக,

காட்பாடி காவல் நிலையம்,

குற்றஎண்.253/2023

U/s.379 IPC ……………..குற்றமுறையீட்டாளர்

// எதிர் //

A1 சுதாகர், த/பெ சுந்தர்ராஜ்

நெ.197/1C மாரியம்மன் கோயில் தெரு,

விரிஞ்சிபுரம் காலனி, அணைகட்டு தாலுக்கா.

A2. அஜித்(எ) அஜித்குமார், த/பெ சண்முகம்

மணி கோயில் தெரு, விரிஞ்சிபுரம் காலனி,

அணைகட்டு தாலுக்கா.

………………..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள்

| Sl.No | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றஎண் | எதிரியின்விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | அரசுக்காக காவல் ஆய்வாளர் மூலமாக,<br>காட்பாடி காவல் நிலையம்,<br>குற்றஎண்.253/2023<br>U/s.379 IPC | A1 சுதாகர் | சுந்தர்ராஜ் | – | நெ197/1C மாரியம்மன் கோயில் தெரு ,விரிஞ்சிபுரம் காலனி, அணைகட்டு தாலுக்கா. | 29 |
| 2 | | அஜித்(எ) அஜித் குமார், | சண்முகம் | -- | மணி கோயில் தெரு, விரிஞ்சிபுரம் காலனி ,அணைகட்டு தாலுக்கா. | 19 |

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| நிகழ்வுநாள் | புகார் கொடுத்த நாள் | எதிரியை கைது செய்த நாள் | எதிரியை பிணையில் விடுவித்தநாள் | சிறைக்கு அனுப்பி வைத்து | வழக்கு விசாரணை ஆரம்ப நாள் | வழக்கு விசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளிகள்மீதானதீர்ப்புரைக்குரிய தீர்வுமுடிவின்நகலைஒப்படைத்தல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 11.08.23 | 12.08.23 | 21.08.23 | 27.10.23 | 21.08.23 | 17.05.2025 | 16.06.2026 | 02.07.2026 | -- | NO DELAY |

இவ்வழக்கானது 18.03.2025-ம்தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு தன் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T பிரபு அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. கடந்த 11.08.2023 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு காட்பாடி பெரிய புதூர் ரோட்டில் வாதி சரஸ்வதி க/பெ வரதன் ஸ்கூல் தெரு பெரிய புதூர் காட்பாடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் பக்கத்தில் உள்ள நிலத்திற்கு மாடு, கன்று குட்டிகளை ஓட்டிக்கொண்டு நடந்து சென்ற போது எதிரிகளாகிய நீவிர் பிள்ளையார் கோவில் எங்கு உள்ளது என்று பேச்சு கொடுத்து கொண்டே வாதியின் கழுத்தில் அணிந்திருந்த 3 சவரன் தங்க சரடை அறுத்துக்கொண்டு சுயலாபம் அடையும் நோக்கத்துடன் திருடிச்சென்றதாக இதச பிரிவு 379 ன் கீழ் காட்பாடி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணநகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்ஷா பிரிவு 230–ன்கீழ் இலவசமாக வழங்கப்பட்டு அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

3. பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரி மீது பிரிவு 379 IPC ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றம் பற்றி வினவ எதிரி குற்றத்தை பொய் என மறுத்துரைத்தனர். எனவே

அரசுதரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**5. <u>அரசுதரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>**

**அ)** அ.சா.1 சரஸ்வதி இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது பெரியபுதூரில் வசித்து வருகிறேன். மாடு மேய்த்தல் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். தன் கணவர் சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். தேதி மாதம் ஞாபகமில்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக தான் பகல் 1 மணியளவில் நடமாட்டம் இல்லாத பகுதியில் ரோட்டு ஓரமாக நான் மாடு மேய்த்து கொண்டிருந்தேன். அந்த இடத்தின் பெரியபுதூர் ஆகும். அப்பொழுது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து தன்னிடம் முகவரி கேட்டார்கள். அப்பொழுது தான் முகவரி கூறிவிட்டு திரும்பிய போது இருவரும் தன் கழுத்தில் இருந்த 3 சவரன் 3 குண்டு வைத்த தங்க நகையை அறுத்து விட்டார்கள். தான் சத்தம் போட்டேன். அவர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று விட்டார்கள். தான் எதிரிகளை பார்த்தால்

அடையாளம் காட்டுவேன். தான் வழக்கு சம்மந்தமாக புகார் மனு கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான். அந்த புகாரில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை தன்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகையை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகையை தான் பெற்று சென்றேன். அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தன்னுடைய கழுத்தில் இருந்த செயினை அறுத்து சென்ற நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. போலிசார் தன்னை விசாரித்தார்கள்என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**ஆ)** அ.சா.2 ஸ்வப்னா இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது பெரியபுதூரில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் அவர் தன் அம்மா. தான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். கடந்த 11.08.2023 ம் வருடம் தான் ஆட்டோ ஓட்டிவிட்டு மதியம் 11.30 மணியளவில் வீட்டிற்கு செல்வதற்காக வந்து கொண்டிருந்தேன். தனது அம்மா அவர் அணிந்திருந்த 3 சவரன் தங்க செயினை அறுத்து சென்று விட்டதாக போன் மூலமாக தகவல் சொன்னார். தான் உடனடியாக சம்பவ இடமான பெரியபுதுர்

மெயின் ரோடு கொல்லை மேடு அருகே தன் அம்மாவிடம் விசாரித்தேன். அப்போது தன் அம்மா தன்னிடம் இரு ஆண் நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து தன் அம்மாவிடம் பிள்ளையார் கோவில் செல்வதற்கு வழி கேட்பது போல் கேட்டு தன் அம்மா அணிந்திருந்து 3 சவரன் தங்க செயினை அறுத்து சென்று விட்டதாக சொன்னார். பின்னர் தானும் தனது தம்பி அரியும் சென்று பின்னாடியே சென்று அக்கம் பக்கம் விசாரித்த போது காட்பாடி நோக்கி சென்றதாக சொன்னார்கள். எதிரி கிடைக்காததால் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 ஹரி இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது பெரியபுதூரில் வசித்து வருகிறேன். டிராக் ஆன் கொரியரில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் . அவர் தன் அம்மா. அ.சா.2 யை தெரியும். தன்னுடைய அக்கா. தான் BSC வரை படித்துள்ளேன். தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், அந்த கையொப்பத்தை தன்னுடைய அம்மாவின் கழுத்து தங்க செயினை அறுத்து எடுத்து சென்றுவிட்டது தொடர்பான வழக்கில் செய்து கொடுத்தேன். அந்த கையொப்பத்தை 12.08.2023

அன்று செய்து கொடுத்தேன். பெரியபுதூர் சம்பவஇடத்தில் வைத்து செய்து கொடுத்தேன். சம்பவ இடத்தில் போலிசார் மேப் வரைந்தார்கள். தன்னுடன் கிருஷ்ணன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஈ) அ.சா.4 ராஜசேகர் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது செதுவாலையில் வசித்து வருகிறேன். சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். தான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலுத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தன் முன்பாக போலிசார் யாரையும் விசாரணை செய்யவில்லை. எந்த சொத்தையும் பறிமுதல் செய்யவில்லை. போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

உ) அ.சா.5 இளங்கோ இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது செதுவாலையில் வசித்து வருகிறேன்.

செதுவாலை பஞ்சாயத்தில் நீரேற்றும் பம்ப் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். தான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 யை தெரியும். தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கையொப்பத்தை ஏரோட்ராம் மோட்டுர் அருகே வைத்து செய்து கொடுத்தேன். என்ன வழக்கு என்று தனக்கு தெரியாது. போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஊ) அ.சா.6 பாலவெங்கட்ராமன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.08.2023 ம் தேதி காலை 11.30 மணிக்கு காட்பாடி உதவி ஆய்வாளர் ஆகிய தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது சரஸ்வதி க/பெ வரதராஜ், பெரியபுதூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார்மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.253/2023, சட்டப்பிரிவுகள் 379 இதச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும்,

பின்னர் முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதேநாள் பகல் 12.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஹரி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அது முறையே அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ஹரி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையியல் இவ்வழக்கின் எதிரிகள் விரிஞ்சிபுரம் காவல்நிலைய குற்ற வழக்கில் ஈடுபட்ட சம்மந்தமாக வேலூர் கிராமிய வட்ட காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரணை செய்ததில் காட்பாடி காவல்நிலைய மேற்சொன்ன குற்ற எண் வழக்கிலும் ஈடுபட்டு உள்ளதாக கூறிய ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் எதிரிகள் சுதாகர், அஜித் என்கின்ற அஜித்குமார் ஆகியோர்களை சம்பிரதாய கைது செய்தேன் விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரை படிவம்–91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம்–91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது 379 இதசவின் 10.10.2023 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

6) இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.6 அரசுதரப்பு சாட்சிகள் எதிரிகளுக்கு பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சங்ஹிதா பிரிவு 351(1)(பி)–ன் கீழ் வினவ எதிரி அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினர். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. <u>தீர்வுக்குரியபிரச்சனை</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசுதரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.

8). இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 104 ன்படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொறுப்பு அரசுதரப்பை சார்ந்ததாகும்.

9) அரசுதரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடுசெய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

10) எதிரிகள் தன்மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்றசம்பவத்தை பொறுத்து தன்மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

11) அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக தான் பகல் 1 மணியளவில் நடமாட்டம் இல்லாத பகுதியில் ரோட்டு ஓரமாக நான் மாடு மேய்த்து கொண்டிருந்தேன். அப்பொழுது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து தன்னிடம் முகவரி கேட்டார்கள். அப்பொழுது தான் முகவரி கூறிவிட்டு திரும்பிய போது இருவரும் தன் கழுத்தில் இருந்த 3 சவரன் 3 குண்டு வைத்த தங்க நகையை அறுத்து விட்டார்கள். தான் சத்தம் போட்டேன். அவர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று விட்டார்கள். தான்

எதிரிகளை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். தான் வழக்கு சம்மந்தமாக புகார் மனு கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான். அந்த புகாரில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை தன்னுடையது தான். தான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகையை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகையை தான் பெற்று சென்றேன். தன்னுடைய கழுத்தில் இருந்த செயினை அறுத்து சென்ற நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.2 கேள்விபட்ட சாட்சி ஆவார். கடந்த 11.08.2023 ம் வருடம் தான் ஆட்டோ ஓட்டிவிட்டு மதியம் 11.30 மணியளவில் வீட்டிற்கு செல்வதற்காக வந்து கொண்டிருந்தேன். தனது அம்மா அவர் அணிந்திருந்த 3 சவரன் தங்க செயினை அறுத்து சென்று விட்டதாக போன் மூலமாக தகவல் சொன்னார். தான் உடனடியாக சம்பவ இடமான பெரியபுதுர் மெயின் ரோடு கொல்லை மேடு அருகே தன் அம்மாவிடம் விசாரித்தேன். அப்போது தன் அம்மா தன்னிடம் இரு ஆண் நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து தன் அம்மாவிடம் பிள்ளையார் கோவில் செல்வதற்கு வழி கேட்பது போல் கேட்டு தன் அம்மா அணிந்திருந்து 3 சவரன் தங்க செயினை அறுத்து சென்று விட்டதாக சொன்னார். பின்னர் தானும் தனது தம்பி அரியும் சென்று

பின்னாடியே சென்று அக்கம் பக்கம் விசாரித்த போது காட்பாடி நோக்கி சென்றதாக சொன்னார்கள். எதிரி கிடைக்காததால் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

13) அ.சா.3 தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பத்தை தன்னுடைய அம்மாவின் கழுத்து தங்க செயினை அறுத்து எடுத்து சென்றுவிட்டது தொடர்பான வழக்கில் செய்து கொடுத்தேன். அந்த கையொப்பத்தை 12.08.2023 அன்று செய்து கொடுத்தேன். பெரியபுதூர் சம்பவஇடத்தில் வைத்து செய்து கொடுத்தேன். சம்பவ இடத்தில் போலிசார் மேப் வரைந்தார்கள். தன்னுடன் கிருஷ்ணன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14)அ.சா.4 மற்றும் அ.சா.5 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் ஆவார். அ.சா.4 மற்றும் அ.சா.5 பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.4 தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலுத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். தன்னிடம் காட்டப்படும்

கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். தன் முன்பாக போலிசார் யாரையும் விசாரணை செய்யவில்லை. எந்த சொத்தையும் பறிமுதல் செய்யவில்லை. போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். கையொப்பத்தை ஏரோட்ராம் மோட்டுர் அருகே வைத்து செய்து கொடுத்தேன். என்ன வழக்கு என்று தனக்கு தெரியாது. போலிசார் தன்னை விசாரிக்கவில்லை. என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

15) அ.சா.6 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை பற்றியும், சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்ததையும் பார்வையிட்டு சென்று மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்ததை பற்றியும் சாட்சிகளை விசாரணை செய்ததை பற்றியும், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததை பற்றியும், வழக்கு சொத்தை தயார் செய்ததை பற்றியும் இறுதியாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார்கள். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும்.

அவரது சாட்சியம் புலன் விசாரணை சார்ந்தது ஆகும். எதிரியை இவ்வழக்கோடு தொடர்புபடுத்த அரசுத்தரப்பில் வேறு எந்தவொரு சாட்சியும் முன்னிலைபடுத்தவில்லை.

16). அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.2 கேள்விபட்ட சாட்சி என்ற அடிப்படையிலும், அ.சா.3 பார்வை மகஜர் சாட்சி என்ற அடிப்படையிலும், அ.சா.4 மற்றும் அ.சா.5 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அவர்கள் தங்களது சாட்சியத்தில் தங்கள் முன்பாக போலிசார் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், எந்த சொத்தையும் பறிமுதல் செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். அவர்களின் கருத்தை வைத்து பார்க்கும்போது அவர்களுக்கு இந்த வழக்கை குறித்து முழுமையாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மேலும் இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லாத நிலையில் எதிரியை அடையாளப்படுத்தி ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் அவர்கள் தங்கள் சாட்சியத்தில் எதிரி அடையாளப்படுத்தவில்லை. மேலும் வழக்கு சொத்து எதிரி தானாக முன்வந்து கொடுத்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மற்றும் அவர்கள் முன்னிலையில் கைப்பற்றபட்டதாக சாட்சியம் அளிக்காத நிலையிலும் எதிரியை அடையாளப்படுத்தி அவர்தான் அந்த திருட்டை ஏற்படுத்தினார் என்றும் சாட்சியம் அளிக்காத

நிலையில் அந்த பலனை எதிரிக்கு வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) அ.சா.1 முதல் அ.சா.6 வரையுள்ள சாட்சிகளின் சாட்சியங்கள் எதிரிகளை தண்டிப்பதற்கு போதுமானதாக சாட்சியங்களாக அமையவில்லை. எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18) எனவே இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 வரைசாட்சியமாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையான சான்றாவணங்கள் மூலம் எதிரியின் மீதான இ.த.ச.பிரிவுகள் 379 IPC–ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை, எனவே எதிரி மேற்படி பிரிவுகளின் கீழான குற்றத்தில் குற்றவாளி என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுதரப்பில் நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.
சி.பி.எண்.182/2023

**20) முடிவாக**

i) எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவு 379 IPC –ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரியின் சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரியை குற்றவாளி அல்ல என முடிவுசெய்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சங்கிதா 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21) **சொத்து பற்றிய ஆணை**: இவ்வழக்கில் சி.பி.எண்.182/2023 வழக்கு சொத்தில் கைப்பற்றபட்ட சுமார் 24 கிராம் (3 சவரன்) தங்கம் உருக்கிய நிலையில் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட புகைப்படமானது மேல்முறையீட்டு காலத்திற்கு பின் வழக்கு சொத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 02 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | சரஸ்வதி |
| அ.சா.2 | ஸ்வப்னா |
| அ.சா.3 | ஹரி |
| அ.சா.4 | ராஜசேகர் |
| அ.சா.5 | இளங்கோ |

| | |
|---|---|
| அ.சா.6 | பாலவெங்கட்ராமன் (விசாரணை அதிகாரி) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவண விபரம் |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | வழக்கு சொத்தின் புகைப்படம் |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜரில் முதலாவது உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில்இரண்டாவது உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ 5 | கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவது உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ 6 | ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகசரில் முதலாவது உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ 8 | முதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ.9 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.11 | படிவம்–91 |

எதிரி தரப்பு சாட்சி : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

எதிரி தரப்பு சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்தஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல்நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரி காவல்நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU — Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.